சிந்தனையில் உதித்த திட்டங்களை நாங்கள் மாநில மாநாட்டிலே நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிறோம் என்று சொன்னால், இதய தெய்வம் எங்களுக்குத் தந்திருக்கிற ஒரு வரப்பிரசாதம். அப்படிப் பேசுகிறபோது அங்கிருந்த அமைச்சர் பெருமக்கள், செயலாளர்கள் என்னுடைய பேச்சினுடைய உரையை புத்தக வடிவில் போட்டிருந்தேன்.-- எங்களுக்குத் தாருங்கள் என்று என்னிடம் நேரடியாக வந்து கேட்டபோது போதுமான அளவில் காப்பி இல்லாததால் நான் திகைத்து விட்டேன். அந்த அளவிற்கு இந்தத் திட்டங்களைத் தந்திருக்கிற இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை 1995-96-ஆம் கல்வியாண்டில் அகரம் சேரியில் ஆதிதிராவிட நல மாணவியர் விடுதி திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 340, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

340—

மீன் உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி நிலையம் அமைத்தல்

*34480—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறால் மீன் வளர்ப்பு மற்றும் மீன் உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இறால் மீன் என்று ஒரு வகை இல்லை. இறால் உண்டு, மீன் உண்டு. இறாலையும் மற்றும் மீன் வளர்ப்பையும் ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் காரங்காடு பகுதியில்

1995 ஏப்ரல் 18]

ரூபாய் 6.32 லட்சம் செலவில் ஒரு பயிற்சி கொடுப்பதற்கு, 1994–லிருந்து ஏற்பாடு செய்யப்பட்டு, பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய லட்சியத்தின்படிதான் வேளாண்மைத் துறையில் விவசாயிகளுக்காக பல்வேறு இடங்களில், பல்வேறு நிலையில் சிறப்பு பயிற்சி அளிப்பதோடு மானிய உதவியும் அளிப்பது போல இந்த உடல் வளர்ச்சிக்கும் நல் வாழ்விற்கும் இன்றியமையாத புரதசத்து மிகுந்த உணவுப் பொருட்களில் மிகச் சிறந்த ஒன்றாக கருதப்படுவதுடன் அன்னியச் செலாவணியை பெரும் அளவில் ஈட்டித் தருவதில் முன்னிலை பெறுகின்ற இறால் உற்பத்திக்கான அனைத்து இறால் வளர்ப்புப் பண்ணைகள் அதிகம் உள்ள பகுதிகளில் இதுபோன்ற பயிற்சி நிலையங்களை துவக்குவதற்கும் அல்லது நேரிடை செயல் முறை அளிக்கும் பயிற்சிகள் அளிப்பதற்கும் இறால் வளர்ப்பதற்கு மானிய உதவிகள் வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் மற்றும் இறால் அதிகமான புரதச்சத்து, கலோரிச் சத்து மற்றும் அனைத்து சத்துகளும் கொண்டது என்பதை மனத்தில் வைத்துத்தான் அதனை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 4 ஆண்டு காலத்தில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, ஏறக்குறைய தமிழகம் இன்றைக்கு இந்தியாவிலேயே 2–வது மாநிலமாக இருந்து 400 கோடி ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணியை பெற்றுத் தந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும் என்றாலும் கூட ஒரு ஹெக்டேருக்கு ரூ. 30 ஆயிரம் மானியம் தற்போது நம்முடைய ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக குளங்களிலே மீனை வளர்க்க வேண்டும் என்பதற்காக ஒரு ஹெக்டேர் மீன் வளர்ச்சிக்கு ஏறக்குறைய அதிகபட்சமாக 20 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1995 ஏப்ரல் 18

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இறால் வளர்ப்புத் துறைக்கு சரியான தொழில் நுட்பம் மற்றும் நல்ல அணுகுமுறை, சீரிய முறையில் திட்டம் இடுதல் போன்றவற்றுடன் விளை நிலம் பாதிக்காமலும், மாசு கெடாமலும் இருக்கும் வகையில், பிரான்ஸ் நாட்டு நிறுவனம் வகுத்திருக்கும் உத்தியைப் பெற்று இறால் உற்பத்தியாளர்களுக்கு சிறப்பு பயிற்சியை அளிப்பதற்கும் சுற்றுப்புற தூய்மையை பேணி பாதுகாக்கவும் ஜியோ லைட்டுகள் அமைக்கச் செய்து, அல்லது ஸ்பிக் பைன் கெமிகல்ஸ் நிறுவனத்தினர் செயற்கையான முறையில் இந்த ஜியோ லைட்டுகளை தயாரித்து நல்ல பலனை தருகின்ற முறையை உற்பத்தியாளர்கள் கடை பிடிக்கவும் ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலிருந்து தரமான தாய் இறால் குஞ்சுகளை. சில நாடுகள் இறக்குமதி செய்து உற்பத்தியைப் பெருக்குவது போல தமிழகத்திலும் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை வெளிநாட்டிலிருந்து டெக்னாலஜியைக் கொண்டுவர வேண்டும் என்பதாகும். அப்படிப்பட்ட டெக்னாலஜியை வெளிநாட்டிலிருந்து கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய ஆற்றல் மிக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடைபிடித்து வருகிற அந்த மதிநுட்பம் மற்றும் அவர்களுடைய ஆற்றலின் காரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆராய்ச்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே உள்ளூரிலேயே தேவையான அனைத்து டெக்னாலஜியும் இருக்கிறது. தேவையானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பி.எஃப்.டி.ஏ. என்று சொல்லக் கூடிய பிராக்கிஷ் வாட்டர் பிஃஷ் பார்மர்ஸ் டெவலப்மென்ட் ஏஜன்சி என்ற நிறுவனத்தை அணுகினால் அவர்களுக்குத் தேவையான அனைத்து தொழில் நுட்பமும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

322—

கிராம நிர்வாக அதிகாரிகளுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

36657*—திரு. எச்.எம். ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—